தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் துரை.சந்திரசேகரன் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் இருந்து பெற்றார். உடன் முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி ம.தி.மு.க.வேட்பாளர் தி.மு. ராஜேந்திரன் வெற்றி பெற்றார். அதற்கான சான்றிதழை தேர்தல் அலுவலர் ராஜேந்திரன் வழங்கினார். உடன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் செல்லத்துரை, நகர செயலாளர் வெங்கடேசன் உள்ளிட பலர் உள்ளனர்.

தென்காசி சட்டமன்றத் தொகுதி தி.மு.க.வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் வெற்றி பெற்றார். அதற்கான சான்றிதழை தேர்தல் அலுவலர் வைஷ்ணவி பால் வழங்கினார். உடன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் உள்ளிட பலர் உள்ளனர்.

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கழக வேட்பாளர் ஆ.மகாராசன் வெற்றிபெற்றதற்கான சான்றிதழை பெற்று கொண்டார்.

2026 சட்டமன்ற தேர்தலில், நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் போட்டியிட்டு 8099 வாக்குகள் வித்தியாசத்தில் மாபெரும் வெற்றிபெற்ற நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ, குன்னூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வெற்றிபெற்றதற்கான சான்றிதழை பெற்றுக்கொண்டார்.

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளரும் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளருமான மு.அப்துல்வஹாப் வெற்றி பெற்றார். அதற்கான சான்றிதழை தேர்தல் அலுவலர் நெல்லை மாநகராட்சி ஆணையாளர் மருத்துவர்.மோனிகா ராணா வழங்கினார்.உடன் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா.சுகுமார்,நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ்,பாளை மண்டல தலைவர் பிரான்சிஸ்,துணை மேயர் ராஜு உள்ளிட பலர் உள்ளனர்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் திருமங்கலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் பெற்றார். உடன் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க வேட்பாளர் பால் மனோஜ் பாண்டியன் வெற்றி பெற்றார். அதற்கான சான்றிதழை தேர்தல் அலுவலர் ராமச்சந்திரன் வழங்கினார்.அருகில் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர். உள்ளிட பலர் உள்ளனர்.

மீன்பிடி தடைக்காலம் எதிரொலி:

மீன்களின் விலை தொடர்ந்து அதிகரிப்பு!

சென்னை, மே.5-

மீன்பிடி தடைக்காலம் அமலில் இருப்பதால், மீன் கள் விலை கிடுகிடு வென உயர்ந்துள்ளது. ஒருகிலோ வஞ்சிரம் மீன் ரூ.1,600 வரை விற்பனை செய்யப் பட்டது.

மீன் விலை கிடுகிடு உயர்வு வங்கக்கடல் பகுதி யில் ஆண்டுதோறும் மீன் பிடி தடைக்காலம் அமல் படுத்தப்படுகிறது. அந்த வகையில், தமிழகத்தில் கடந்த ஏப்ரல் 15 ம் தேதி தடைக்காலம் அமலுக்கு வந்தது. வருகிற ஜூன் 14ந் தேதி வரையில் 61 நாட்கள் வரை மீன்பிடி தடைக்கா லம் அமலில் இருக்கும்.

மீன்பிடி தடைகாலம் அமலில் இருப்பதால் சென்னை காசிமேடு மீன் பிடி துறைமுகத்திற்கு வரும் மீன்வரத்து கணிச மாக குறைந்துள்ளது. தற் போது, ரப்பர் படகுகள் மூலம் ஆழ்கடலுக்குச் செல்லாமல் கடலோரத் தில் மட்டும் மீன் பிடித்துச் வருகின்றனர். இதனால் தடைகாலத்திற்கு முன்பு 180 முதல் 200 டன் வரை கிடைத்து வந்த மீன்கள் தற்போது 20 முதல் 30 டன் அளவில் மட்டுமே கிடைக்கிறது. அதுமட்டு மின்றி, கேரளா, கர்நா டகா, கோவா, மும்பை போன்ற வெளிமாநிலங்க ளில் இருந்து லாரி மற்றும் ரெயில்கள் மூலம் பதப்ப டுத்தப்பட்ட மீன்கள் கொண்டுவரப்பட்டு விற் பனை செய்யப்படுகிறது. இதனால் மீன் விலை கிடு கிடுவென உயர்ந்துள்ளது. எண்ணிக்கை குறைவு அந்த வகையில், வார விடுமுறை தினமான நேற்று முன்தினம் காசி மேட்டில் வழக்கமாக வார விடுமுறை நாட்களில் வருவோரை காட்டிலும் நேற்று முன்தினம் வந்தவர் களின் எண்ணிக்கை குறை வாகவே இருந்தது.

கா சி மே டு துறைமுகத்தில் நேற்று முன்தினம் விற்பனை செய்யப்பட்ட மீன்களின் விலைப் பட்டியல் விவரம் வருமாறு:-

மீன்கள் விலை (1கிலோ) கருப்பு வாவல் 1400 பாறை 1100 பால் சுறா 900 சங்கரா 400 இறால் 550 நண்டு 600 மத்தி 160 தடைகாலத் திற்கு முன்பு ரூ.850க்கு விற்பனை செய்யப்பட்ட வஞ்சிரம் தற்போது ரூ.1,600 வரை விற்கப் பட்டது. ரூ.450 முதல் ரூ.600 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த சீலா மீன் நேற்று முன்தினம் ரூ.850 முதல் ரூ.950 வரை விற்பனை செய்யப் பட்டது.

திருநங்கையர் உரிமை பறிப்பு சட்டத்தை ரத்து செய்ய கோரிய வழக்கு!

ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்!

6 வாரத்தில் பதிலளிக்க உத்தரவு!

புதுடெல்லி, மே 5-

திருநங்கையர் நலனுக்கு எதி ரான சட்டம் கடந்த மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. இதனை எதிர்த்து பல் வேறு திருநங்கையர் அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தன. இந்த வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்யகாந்த் அமர்வில் விசார ணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரர்கள் தரப் பில் ஆஜரான வழக்கறிஞர் அபி ஷேக் சிங்வி, பிறப்பில் திருநங்கை யர் ஆக பிறந்தவர்களை மருத்துவ சான்றிதழ் பெற வேண்டும் என்று கூறுவது அரசியல் சாசன உரி மைக்கு எதிரானது என்றும் முந் தைய உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது என்றும் வாதிட்டார். மருத்துவ அறுவை சிகிச்சை செய் தால் தண்டனை வழங்கும் வகை யில் சட்டம் கொண்டுவரப்பட் டுள்ளது. இதனை ரத்துசெய்ய வேண்டும் என்றும் அவர் வலியு றுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, ஒன்றிய அரசு 6 வாரத்தில் பதிலளிக்க வேண்டும் என நோட்டீஸ் அனுப்பி உச்சநீதிமன்றம் உத்தர விட்டது. மேலும் அனைத்து மாநில அரசுகளையும் வழக்கில் இணைக்கவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன், இந்த வழக்கை விசாரிக்க 3 நீதிபதிகள் அடங்கிய தனி அமர்வு அமைக் கப்படும் என்றும் உச்சநீதிமன்றம் அறிவித்தது.